1973 பிப்ரவரி 28]

areas, a large number of eggs are produced and in order to facilitate marketing of such production of eggs, such a society is formed in the City of Madras and if found necessary in the other big cities, after some experimentation, such societies may be started.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* வினா—176 திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் குடிநீர் வழங்கு திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கும்முடிப்பூண்டி பேரூ ராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை. கும்முடிப்பூண்டி பேரூராட்சியினர் முன்வந்து குடிநீர் திட்டம் தேவை என்று குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகினால் இதுபற்றி மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாடெங்கிலும் குடிநீர் வழங்கு திட்டம் நிறைவேற்றப்படும் இந்தக் காலத்திலும், அந்தப் பேரூராட்சியினர் கட்சி மனப்பான்மையின் காரணமாக உரிய நேரத்தில் முன்வராவிட்டாலும் இப்பொழுது தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு சிறப்புத் திட்டத்தின்கீழ் எல்.ஐ.சி.யிடம் உதவி பெற்று இதை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆறு ஆண்டுக் காலத்தில், சுமார் 40 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிப்பு வந்திருப்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். அதன் கீழ் இதுபோன்ற கிராமங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பஞ்சாயத்து யூனியன்கள் கேட்கவில்லையென்றால் குடிநீர் வழங்கப்படாதா? அவர்கள் கேட்கா விட்டாலும் குடிநீர் வழங்குவதற்குத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் சொன்ன பதிலுக்குப் பிறகும் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பது வியப்பைக் கொடுக்கிறது. இதுவரையிலும் இருந்தது, பஞ்சாயத்து

யூனியன் கேட்க வேண்டுமென்று இருந்தது. இப்பொழுது ஆறு ஆண்டுக் காலத்தில் குடிநீர்த் தேவைகளை ஆங்காங்கு நிறைவு செய்ய அரசு எடுத்துள்ள முயற்சியின் காரணமாக, பஞ்சாயத்து யூனியன்களும் கேட்க வேண்டும், அப்படிக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை, குடிநீர், வடிகால் வசதி வாரியத்தின் சார்பாக அந்தத் திட்டம் துவங்கப்படும்.

* **வினா 177. திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக காவிரி ஆற்றில் ஊறு தோண்டப்பட்டு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது? அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். தொட்டியம் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் 23-6-1972ல் துவங்கப்பட்டுள்ளது. ஆய்வு வேலைகள் 1973 மார்ச்சு கடைசியில் முடிவடையும்.

(இ) கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் தற்பொழுது இவ்வூராட்சிக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

திரு. சி. க. வடிவேலு : தலைவரவர்களே, அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? அந்தத் திட்டம் எப்பொழுது செயலுக்கு வரும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆய்வு வேலைகள் மார்ச்சு திங்களில் முடிவுறும். முடிந்தபிறகு மதிப்பீடு எவ்வளவு என்று தெரிவிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்படி 6 ஆண்டுக் காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வசதி செய்ய 40 கோடி ரூபாய் அளவில் அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. இந்தியாவிலே இப்படி செய்ய மத்திய சர்க்காரும் பணம் ஒதுக்கியிருக்கிறது அப்படி ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்குமா?